மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளங்களில் மீன்கள் இருந்தால் தான் அந்தக் குளத்திலே இருக்கின்ற அழுக்கைத் தின்று குளத்தைத் தூய்மைப்படுத்தும் என்பது விஞ்ஞான ரீதியாகக் கண்டு பிடிக்கப்பட்ட ஒன்று. தூய்மையாக ஆகவேண்டிய குளத்தை, தூய்மையற்றதாக இருக்கவேண்டும் என்று தீட்சிதர் அவர்கள் விரும்புகிறார்களா ?

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லும் பதிலை நான் சுத்தமாக நம்புகிறேன். இருந்தாலும் பல இடங்களில் இருப்பதைச் சொல்கிறேன். பாபநாசம் நதியிலே வருகிறது. அந்த இடத்திலே ஒரு மைலுக்கு மீன் பிடிக்கக் கூடாது என்று இருக்கிறது. சிருங்கேரி துங்கா நதியிலே போனால், 2 மைல்களுக்கு மீன் பிடிக்கக்கூடாது என்று இருக்கிறது. அதே போல் ரிஷிகேசத்தில் 3 மைல்களுக்கு மீன் பிடிக்கக் கூடாது என்று இருக்கின்றது. மீன்கள் நிறைய இருக்கின்றன. அந்த மாதிரி மீன்பிடித்துத்தான் அதை சுத்தம் பண்ணவேண்டும் என்பது தேவையில்லை. மீன்களைப் பிடிக்காமலேயே அதன் அவுட்லெட்டையும், இன்லெட்டையும் சரியான முறையிலே அமைத்தால் அது சுத்தமாக இருக்கமுடியுமா என்பதைப் பற்றி அரசு ஆராயவேண்டுமென்று விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

அருள்மிகு கபாலீஸ்வரர் கோவில் திருக்குளத்தைச் சீர்படுத்தி தெப்ப உற்சவம் நடத்துதல்

* 10011—திரு. நா. கணபதி

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை, மயிலாப்பூர் அருள்மிகு கபாலீஸ்வரர் கோவில் திருக்குளத்தைச் சீர்படுத்தி, தண்ணீர் தேக்கி தெப்ப உற்சவம் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அருள்மிகு கபாலீஸ்வரர் கோயில் திருக்குளத்தைச் சீர் திருத்தி சரிசெய்து அதில் தண்ணீர் தேக்கி, தெப்ப உற்சவம் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. நா. கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுக்காலமாக தண்ணீர் கட்டுப்பாட்டால் கபாலீஸ்வரரே பாதிக்கப்பட்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கபாலீஸ்வரரே பாதிக்கப் பட்டாரா ? (சிரிப்பு).

திரு. நா. கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபாலீஸ்வரரே பாதிக்கப்பட்டு அவர் பவனி வர முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1974 ஆம் ஆண்டு அன்றைக்கு கபாலீஸ்வரர் கோயில் குளத்திலே தூர் வாருவதற்கு வந்தார்கள். முதல்வர் அவர் களின் கைராசியால் அன்றைக்கு மழை அதிகமாகப் பெய்து குளம் நிறைந்து ஏறத்தாழ 7, 8 ஆண்டுகள் அந்தத் தெப் போற்சவம் சிறப்பாக நடந்தது. மீண்டும் ஒரு முறை முதல்வர் அவர்கள் கபாலீஸ்வரர் குளத்திற்கு வந்து சீரமைப்புப் பணி களைத் துவக்கித் தருவாரா என்று கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை வரும் நேரமாகப் பார்த்து தூர் வார வருகிறேன்.

திரு. நா. கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கபாலீஸ்வரர் குளத்திற்கு நான்குபுறமும் தண்ணீர் வரக்கூடிய வழிகளை ஆக்கிமிரப்புதாரர்கள் அடைத்திருப்ப தாகவும் , அது மட்டுமல்லாமல் கடந்த ஆட்சியில் அந்தக் குளத்திலிருந்த களிமண்களை எல்லாம் வெட்டியெடுத்து அப்புறப் படுத்தப்பட்டிருப்பதன் காரணமாகத் தண்ணீர் தேங்கியிருக்க முடியாத நிலைமையில் இருப்பதாகவும், அதுமட்டுமல்லாது குளத்தைச் சுற்றி பலமாடிக் கட்டிடங்கள் பல வந்து சக்தியுள்ள ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு அந்தக் குளத்துத் தண்ணீரை உறிஞ்சிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. இவற்றை யெல்லாம் அரசு கவனத்தில் கொண்டு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மயிலைத் தொகுதியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சொல்வதுபோல், கடந்த 6, 7 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் மூலமாக ஏறத்தாழ 8 லட்சம் ரூபாய் செலவிலே அங்கே தூர் வாரப்பட்டிருக்கிறது. மேல்மட்டத்திலேயுள்ள களிமண் அனைத்தும் அகற்றப்பட்டிருக்கிறது. ஆகவேதான் சமீபத்திலே உறுப்பினர் அவர்களும், மாநகராட்சி அதிகாரிகளும், அறநிலையத் துறை அதிகாரிகளும் அங்கே சென்று வேறு சில ஏற்பாடுகளைச் செய்து, பக்கத்திலேயிருந்து வரக்கூடிய தண்ணீரை அந்தக் குளத்திற்குள்ளே விடுவதற்கு ஏற்பாடு செய் தும் கூட, இந்த ஆண்டு அதிகமான மழை பெய்தும்கூட, இந்த நேரத்திலே தண்ணீர் அந்தக் குளத்திலே தேங்கவில்லை.

1991 சனவரி 21]

கீழே போய்விட்டது. ஆகவே அங்கே மத்தியிலே இருக்கக்கூடிய நீராழியைச் சுற்றி ஒரு 25 அடி அகலத்திற்கு சுற்றுச்சுவர் எழுப்பி அந்த இடத்திற்குள்ளே கான்கிரீட் தளம் அமைத்து—ஏற்கெனவே திருவல்லிக்கேணியில் இருக்கக்கூடிய பார்த்தசாரதி கோயிலைச் சேர்ந்த குளத்திலே அப்படிப்பட்ட கான்கிரீட் தளம் முழுவதுமாக அமைக்கப்பட்டிருக்கிறது—அப்படியே இங்கே முழுவதுமாக அமைக்காமல் 25 அடி அகலத்திற்கு மட்டும் அமைத்து, 6 அடி ஆழம் தண்ணீர் நிற்கக்கூடிய அளவுக்கு அமைப்பதற்கு இந்தத் துறை ஏற்பாடு செய்து வருகிறது.

நுகர்வோர் புகார்களை விசாரிக்க மாவட்ட அமைப்புகள்.

* 2458—திரு. பெ. சு. திருவேங்கடம் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நுகர்வோர் புகார்களை விசாரிக்க நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மாவட்ட அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்பு (District Consumer Dispurters Redressal Forum) அமைக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்கள் நுகர்வோர்களது புகார்களை விசாரித்துக் கொண்டிருக்கின்றன.

9–45 மணி

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட நிர்வாகம், இதுவரையில் என்னென்ன புகார்களைப் பெற்றுள்ளது ? அவைகளில் முக்கிப்மானவைகள் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் மாவட்டத்திலே உள்ள இந்தக் குழுக்கள், நுகர்வோர்களுக்கு ஏற்பட்டுள்ள குறைபாடுகள் குறித்துத் தெரிவிக்கின்றபோது, அவைகளை விசாரித்து முடிவு சொல்லியிருக்கிறது. சென்னையிலே 90